**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ம் நாள் செவ்வாய்கிழமை**

<u>O.S. 47/2020</u>

வாதி தரப்பு சாட்சியாகிய PW2-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகையன் | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | மாரிமுத்து | கிராமம் | : | விஜயபுரம் |
| ஜாதி | : | | தொழில் | : | லாரி புக்கிங் ஆபிஸ் வைத்துள்ளேன் |
| சமயம் | : | | வயது | : | 78/25 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் தாலுக்கா அகரகடம்பனார் என்ற முகவரில் வசித்துவந்ததாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையின் வாக்குமூலத்தின் தாவா சொத்தின் புலஎண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1ம் வாதியின் கணவர் கோபால் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வீடு கட்டி வசித்துவருகிறார் என்ற விபரம் நான் என்

முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். 1ம் வாதியின் கணவர் கோபாலுக்கும் பிரதிவாதி விஜயபுரம் முஸ்லீம் உறவுமுறை ஜமாத்க்கும் வழக்கு நடந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் அரசு நிலத்தில் குடியிருந்துவருவதால் நான் தவறாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதி குடும்பம் எனக்கு வேண்டபட்டவர் என்றால் சரிதான். வாதி குடும்பத்தினார் எனக்கு வேண்டபட்டவர் என்பதால் போபால் மறைவிற்கு பிறகு அவரது வாரிசுகளான வாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி குடியிருந்து வருவதாக சொல்லும் வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் என் வீட்டிலிருந்து 4 வீடு தள்ளி மேற்கே குடியிருந்து வருகிறார்கள். கதவுஎண். 32/10 அல்லது 11 ஆகும். வாதிகள் நான் கூறுவதுபோல் தாவா சொத்தில் குடியிருந்துவரவில்லை என்றாலும் நான் கூறும் கதவிலக்கம் கொண்ட வீடு தாவா சொத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. வாதிகள் அழைத்ததன் பெயரில்தான் நான் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரிதான்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.01.27 07:01:05 +0530